1079

. 7—PARADISE BIRDS' SECOND SERIES: No. 2.

TAMIL

FIRST BOOK.

பாலருக்குப் பால்

என்னும்

முதலாம் புத்தகம்.

OFFICE OF THE REGISTRAR OF
15 MAR 1921
MADRAS

BY

Y. G. BONNELL, P.B.,
Author of "Paradise Bird Series."

NISI DOMINUS FRUSTRA
S A
Y. G. BONNELL, P.B.

THIRD EDITION.

MADRAS:
PRINTED AT THE MADRAS DIAMOND PRESS.

1921

Rights Reserved.

[விலை: 2½ அணா.

TB
031,6N2
N21.
171018.

உபாத்திமாருக்குப் பொதுக் குறிப்புகள்.

———:O:———

1. பாலர்-வகுப்பு உபாத்தியாயர் கெட்டிக்காரரும், வேலையில் உண்மை யுள்ளவருமா யிருப்பதோடு சந்தோஷம், அன்பு, சாந்தம், பொறுமை முதலிய நற்குணங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், சிறு பிள்ளைகளுக்குத் தாய் போன்றவருமாய் இருத்தல் அவசியம். பாலர்-வகுப்பை நடத்தும் திறமுடையவர் அதற்கு மேலுள்ள வகுப்புகளை நன்றாய் நடத்தக் கூடியவராயிருப்பது ஆச்சரியமல்ல.

2. உபாத்தியாயர் முதலாவது பாடத்தின் தலைப்பிலிருக்கும் படத்தைப் பாலருக்குக் காட்டி, அது என்னவென்று அவர்கள் சொன்னபின் கரும்பலகையில் இரட்டைக் கோடுகளிட்டு, படத்தைக் குறிக்கும் எழுத்துக்களில் ஒன்றை எழுதி, அதைச் சரியாய் உச்சரித்துக் காட்டவேண்டும்: அதன்பின் பிள்ளைகளுக்கும் அவ்வெழுத்தை உச்சரித்துக்கொண்டே இரட்டைக் கோடுகளிடப்பட்ட கற்பலகையில் எழுதவேண்டும்.

3. உபாத்தியாயர் பலகையில் எழுதுகையில் எழுத்தை எங்கே துவக்கி அதை எங்கே முடிக்கிறார் என்பதை ஒவ்வொரு பிள்ளையையுங் கவனிக்கும்படி செய்தும், பிள்ளைகள் எழுதுகையில் எழுத்தை எங்கே துவக்கி அதை எங்கே முடிக்கிறார்கள் என்பதைக் கண்டறியும்படி ஒவ்வொரு பிள்ளையையும் தனித் தனியாகக் கவனித்தும் தப்பிதத்தை அப்போதப்போது திருத்த வேண்டும். சிறு பிள்ளைகள் புதிதாய் ஒன்றைக் கற்பது இலேசு; ஆனால் அவர்கள் தப்பாய்க் கற்றதை மறப்பது இலேசல்ல.

4. உபாத்தியாயர் அந்தந்தப் பாடங்களின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை வாசித்து, வற்புறுத்த வேண்டியவைகளை ஒவ்வொரு முறையும் வற்புறுத்திப் பிள்ளைகள் மனதில் பதிக்கவேண்டும்.

5. பிள்ளைகள் உபாத்தியாயர் கரும்பலகையில் எழுதுவதைப் பார்த்து முதலாவது எழுதவும், அதன் பின் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கும் எழுத்தப்பியாசமாகிய ஒன்பதாம் அப்பியாசத்தைப் பார்த்து எழுத்துக்களின் உருவங்கள் மனதில் பதியும்வரை திரும்பத் திரும்ப எழுதவுங் கற்பிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு எழுத்துக்களை எழுத, வாசிக்கக் கற்பிக்கும் போதே அந்தந்தப் பாடத்திலுள்ள எண்ணையும் எழுத வாசிக்கக் கற்பிக்க வேண்டும்.

PARADISE LODGE,
18th February 1921.

Y. G. BONNELL, P.B.

TAMIL

FIRST BOOK.

பாலருக்குப் பால்

என்னும்

முதலாம் புத்தகம்.

BY

Y. G. BONNELL, P.B.,
Author of "Paradise Bird Series."

OFFICE OF THE REGISTRAR
15 MAR 1921
MADRAS

THIRD EDITION.

MADRAS:
PRINTED AT THE MADRAS DIAMOND PRESS.

1921

All Rights Reserved.

Price: $2\frac{1}{2}$ Annas.] [விலை: $2\frac{1}{2}$ அணா.

Ten remarkable features peculiar to this book.

1. As **writing** ought to go hand in hand with reading, letters (ட, ப, ம) easy to write come first, difficult next and more difficult last.

2. **Short** and **long** letters are placed side by side from the very first lesson ; for, that is the only way to teaeh correct pronunciation.

3. ணா, றா, னா are the only three letters that differ from other letters in the அ series and they are placed before the pupils in an impressive way (*Vide* page 11).

4. The difference between ர and ற (12) and among ல, ள and ழ (10) in pronunciation and meaning is pointed out.

5. There are three forms in உ, ஊ series and they are given separately (16, 17, 18). கூ which differs from other letters in having the **fourth** form is singled out (17).

6. ணை, லை, ளை, னை are the only four letters that differ from other letters which have the sign ை and they are placed separately to impress the pupils (21, 22).

7. ணொ, றொ, னொ are the only three letters which differ ftom others in the ஒ, ஓ series as in அ series. The difference is shown in an emphatic way (23, 24).

8. 'பாலருத்துப் பால்' is the only Tamil **First Book** which teaches how to write correctly (*Vide* notes under each lesson and pages 30, 31 32 33).

9. The words under each picture can be read easily by the pupils and even the word under the very first picture is not an exception.

10. 'பாலருக்குப் பால்' has a plan of its own. For example, pages 21 and 22 contain all letters of the ஐ series *viz.*, கை, ஙை, சை, ஞை, டை, ணை, தை, நை, பை, மை, யை, ரை, லை, வை, ழை, ளை, றை, னை. The same plan is adopted for other series also.

PARADISE LODGE,
21st February 1921.

Y. G. Bonnell, P. B.

படம்.

ட	டா	ட்
ப	பா	ப்
ம	மா	ம்

1 ஒன்று. க.

பட	படம்	மடம்	மாமா
பாட	பாடம்	மாடம்	மாடா

குறிப்பு:—கரும் பலகையில் இரட்டைக் கோடுகளிட்டு, ட, ப, ம, என்ற எழுத்துக்களை எழுதி, அவைகளுக்குப் பின் இந்த ா குறி இடுவதினால் அவைகள் நீண்டொலிப்பதையும், அவைகள் மேல் புள்ளி வைப்பதினால் அவைகளுக்குள்ள உச்சரிப்பு மாறுவதையுந் தெளிவாய் உச்சரித்து விளக்குக.

மரம்.

ம	மா	ம்
ய	யா	ய்
ர	ரா	ர்

2. இரண்டு. உ.

மரம்	மயம்	பாயா	பாய்
பயம்	மாயம்	பாரா	யார்

குறிப்பு:—இந்தப் பாடத்திலும்; இனிவரும் பாடங்களிலும் குறிலையும், நெடிலையும் உச்சரிப்பினாலும், உருவத்தினாலுங் கண்டு கொள்ளச்செய்க. ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு எழுத்தையும் எங்கே துவக்கி எங்கே முடிக்கிறதென்பதைக் கவனித்துத் திருத்துக.



காகம்.

ர	ரா	ர்
ச	சா	ச்
க	கா	க்

3. மூன்று. ௩.

சரம்	சாரம்	காகம்	கக்க
கரம்	காரம்	காசம்	காக்க

குறிப்பு.—க, ச என்ற எழுத்துகளையும், இதற்கடுத்த பாடத்தில் வருகிற த என்ற எழுத்தையும் எழுதுகையில் அவைகளின் விலா புடைத்திருக்கிறதா வென்பதைக் கவனிக்கச் செய்க.



நாய்.

த	தா	த்
ந	நா	ந்

4. நாலு. ச.

நகம்	நாகம்	நாய்	தந்தம்
தடம்	தாகம்	தாய்	சத்தம்

குறிப்பு.—ந, த என்பவை கீழ்ப் பக்கம் அளவு கடந்து செல்வதைக் கண்டு கொள்ளச் செய்க.



மஞ்சம் (கட்டில்).

ங	ஙா	ங்
ஞ	ஞா	ஞ்

5. ஐந்து. ரு.

ஙனம்	சங்கம்	பங்கம்	தங்கம்
ஞயம்	ஞாயம்	பஞ்சம்	மஞ்சம்

குறிப்பு.—ங, ஞ என்பவைகள் உச்சரிப்பில் பேதப்பட்டிருப்பதைச் சரியாய் உச்சரித்துக் காட்டி, ஞ கீழ்ப் பக்கம் அளவு கடந்து செல்வதைக் கண்டு கொள்ளச் செய்க.

அப்பியாசம் I.

ஞ	த	ர	ந	ச	ட
ங	ப	க	ய	ம	ஞ

தாய்	சத்தம்	பந்தம்	மாமா
கரம்	பஞ்சம்	தங்கம்	பட்டா
ஙனம்	காகம்	சாரம்	பாயா

ஞயம்	பாடம்	மஞ்சம்	பார்
நகம்	நாகம்	மச்சம்	யார்
பயம்	காரம்	சங்கம்.	நாய்
மடம்	பக்கம்	ஞாயம்	படம்

1	2	3	4	5
௧	௨	௩	௪	௫

பாலம்.

வ	வா	வ்
ல	லா	ல்

6. ஆறு. சா.

வரம்	வ்ாரம்	வாலம்	வால்
பலம்	பாலம்	பாவம்	நல்ல

குறிப்பு.—வ, ல-இவை வடிவில் வித்தியாசப்படுகிறதைக் காட்டி, கரும் பலகையில் இரட்டைக் கோடிட்டு இவ்வெழுத்துக்களை எழுதி, சுழிகள் கீழ்க் கோட்டிலிருந்து புறப்படுகிறதைக் கண்டுகொள்ளச் செய்க.



பலாப் பழம்.

ல	லா	ல்
ள	ளா	ள்
ழ	ழா	ழ்

7. எழு. எ.

கலம்	பலா	கம்மல்	பாலர்
களம்	களா	மஞ்சள்	கவளம்
பழம்	பழா	யாழ்	பவழம்

குறிப்பு:—மேற் காட்டிய மூன்றெழுத்துக்களின் ஒலி பேதத்தை உச்சரித்துக் காட்டி, அவைகளாலுண்டாகும் அருத்த பேதத்தையும் விளக்கிக் காட்டுவதுடன் ழ அளவு கடந்து கீழ்ப்பக்கஞ் செல்லுவதைக் கண்டுகொள்ளச் செய்க.



கண்.

ண	ணா	ண்
ற	றா	ற்
ன	னா	ன்

8. எட்டு. அ.

தனம்	கண்	கற்ற	கன்னான்
மணம்	கனா	கற்றா	வண்ணான்
நாணம்	மான்	கனம்	கன்னம்

குறிப்பு:—ண், ற், ன்—இந்த மூன்று மெய்கள் மாத்திரம் ஆ என்ற உயிர் சேர்கையில் ணா, றா, னா, என்றாகும், மற்ற மெய்கள் போல் ா அடையாளத்தைப் பெறா வென்பதைப் பிள்ளைகள் மனதில் பதிக்க.



தாரா. (வாத்து.)

ர	ரா	ர்
ற	றா	ற்

9. ஒன்பது. ௯.

தர	தரார்	மரம்	தாரா
கற	கறார்	மறம்	கற்றார்
மற	நார்	வற்றல்	தாரார்

குறிப்பு.—ரகர றகரங்களின் ஒலி பேதத்தையும், அவைகளால் உண்டாகும் அருத்த பேதத்தையும், ற அளவு கடந்து கீழ்ப்பக்கஞ் செல்வதையுங் கண்டு கொள்ளச்செய்க.

ஆரம்.

அ ஆ=ா, ◡

அள்	அரம்	அவல்
ஆள்	ஆரம்	ஆவல்

10. பத்து. ௰.

1. கால் அணா.
2. அவள் யார்?
3. அவனா நானா?
4. ஆடல் பாடல்.
5. ஆறாம் பாடம்.
6. ஆசான் மகன்.

குறிப்பு.—ஒரு மெய்யெழுத்தோடு அ சேரும்பொழுது அதன் மேலுள்ள புள்ளி விடப்படுவதையும், ஆ சேரும் பொழுது ா ஆவது ◡ ஆவது அறிகுறியாய் வருவதையுங் கண்டுகொள்ளச் செய்க. அ, ஆ அளவு கடந்து கீழே செல்லும்; அவைகளின் சுழிகள் மேற்கோட்டுக்குச் சமீபத்தில் துவங்கும். ஆ அறிகுறி ணா, றா, னா, என்ற மூன்று எழுத்துக்களில் மாத்திரம் அளவு கடந்து கீழே செல்லும்.

அப்பியாசம் 2.

அ	ண	ர	ள	ல
வ	ழ	ற	ன	ஆ

மனம்	கம்மல்	கற்றார்	ஆள்
களம்	வாரம்	பாலம்	கணா
பலா	தாரா	கன்னான்	தர

வால்	மஞ்சள்	களா	கண்
பழம்	வண்ணான்	யாழ்	அள்
மணம்	கவளம்	மறம்	பல்
ஆரம்	அண்ணன்	கறார்	கற

6	7	8	9	10
௬	௭	௮	௯	௰

ஈ. ஈக்கள்.

இ = ஈ = 

இடி	இல்லி	இத்தி	இஞ்சி
ஈட்டி	ஈயம்	ஈறிலி	ஞிமிர்

11. பதினொன்று. ௰௧.

1. நீல கிரி.
2. பயிர் வழி.
3. இனிய கனி.
4. மீதி அரிசி.
5. பிணி தீர்.
6. கறி தாளி.
7. விசிறி பிடி.
8. கிரீடம் தரி.

குறிப்பு.—டகரம் ஒன்று தவிர்ந்த மற்ற மெய்களோடு இ, ஈ, என்னும் உயிர் எழுத்துகள் சேரும்பொழுது அவைகளின் அறிகுறிகள் அளவு கடந்து மேற்சொல்லும். இ மேலும் கீழும் அளவுகடந்து செல்வதையும், அதன் சுழி மேற் கோட்டிற்குச் சமீபத்தில் துவங்குவதையுங் கண்டு கொள்ளச் செய்க.

உளி.



ஊசி.

உ = ‌ு   ஊ = ‌ூ

நு	சு	பு	யு	வு
நூ	சூ	பூ	யூ	வூ

உப்பு	பூச்சு	யுகம்	உணவு
ஊசி	சூப்பு	யூகம்	பாவூர்

12. பன்னிரண்டு. ௰௨.

1. உப்பு நிலம்.
2. கலி யுகம்.
3. நிலவு காலம்.
4. சுப தினம்.
5. சூரிய கதிர்.
6. பாவூர் வழி.
7. யூதர் பூமி.
8. உளியும் ஊசியும்.

குறிப்பு.—சு தவிர்ந்த மற்ற உயிர்மெய்கள் அளவு கடந்து கீழ்ச் செல்வதைக் கண்டுகொள்ளச் செய்க.

குருவிக் கூடு.

உ = ◌ு   ஊ = ◌ூ

கு	டு	மு	ரு	ழு	ளு	கூ
	டூ	மூ	ரூ	ளூ	ழூ	

உரூபி	முட்டு	பளுவு	கூண்டு
குரூபி	மூட்டு	கழுவு	ஊருணி

13. பதின்மூன்று. கங.

1. குடிக் கூலி.
2. கடூர சன்னி.
3. உள்ளூர் மாடு.
4. புறாக் கூடு.
5. குரூர மனிதன்.
6. கழு மரம்.

குறிப்பு:—கூ விலுள்ள ஊ அறிகுறி பேதப்பட்டிருப்பதையும், அது ஒன்றில் மாத்திரம் இரட்டைக்கோடுகளுக்குள் அடங்கியிருப்பதையும், டு, டூ-வில் அளவுகடந்து மேலுங் கீழுஞ் செல்வதையும், மற்ற எழுத்துகளில் அளவு கடந்து கீழ்ச் செல்லுவதையுங் கவனிக்கச் செய்க.



தூண். தூண்கள்.

உ = ு ஊ = ூ

ஞு	ணு	து	நு	லு	று	னு
ஞூ	ணூ	தூ	நூ	லூ	றூ	னூ

தாது	மூன்று	பூணூல்	மானூர்
நூல்	நாலு	நுகம்	சிற்றூர்

14. பதினாலு. கச.

1. இரண்டு தூண்கள்.
2. மூன்று தூதர்.
3. நாலு மனிதர்.
4. மூங்கில் கணு.
5. சிற்றூர் வண்டி.
6. மானூர் மாடு.

குறிப்பு:—உ, ஊ அறிகுறிகள் இங்கு அளவு கடந்து கோட்டுக் கீழ்ச் செல்லுவதைக் கவனிக்கச் செய்க.



எருதுகள். ஏர். மனிதன்.

எ = ெ   ஏ = ே

எருது	செடி	நெய்	பெட்டி
ஏழு	சேறு	நேரே	பேத்தி
கெடு	தெரு	மெய்	வெள்ளி
கேடு	தேள்	மேலே	வேதம்

15. பதினைந்து. கரு.

1. மகனே வா.
2. மெய்யே பேசு.
3. பெண்ணே பாடு.
4. நீ எழுது.
5. உள்ளே சென்றேன்.
6. கீழே உட்காரு.
7. நண்டு பிடி.
8. பாடு பட்டேன்.

குறிப்பு.—எ, ஏ அறிகுறிகளாகிய இரண்டு கொம்புகளும் மேற்பக்கம் அளவு கடந்து செல்வதைக் கண்டு கொள்ளச் செய்வதுடன், எழுதுகையில் அவைகளைக் கீழ்க் கோட்டிலிருந்து ஆரம்பிக்கச் செய்க.

அப்பியாசம் 3.

அ	இ	உ	எ	ஐ	கு
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	கூ

ஏழு	கூண்டு	இஞ்சி	வேதம்
ஊசி	ஈயம்	யூகம்	தேவன்
நூல்	செடி	எருது	சிற்றூர்
இடி	தேள்	உணவு	மாணூர்

1. இல்லிக் குடம்.
2. ஈயப் பணம்.
3. உப்பு நிலம்.
4. ஊசிக் காது.
5. எருமை மாடு.
6. ஏழு மனிதர்.
7. கிழக்கு மேற்கு.
8. மெய்யே பேசு.

11	12	13	14	15
கக	க௨	க௩	க௪	க௫



குதிரை.

ஐ-ை ைநு

ஐயர்	காடை	மைசூர்	மஞ்ஞை
நகை	நைவு	கூரை	தையல்
ஆசை	தயை	பாறை	பையன்
ஐந்து	மழை	புகை	வைசூரி

16. பதினாறு. ௧௬.

1. குதிரை வண்டி.
2. வேட்டை நாய்.
3. பாறை நிலம்.
4. கூரை வீடு.
5. மழை மேகம்.
6. வாடைக் காற்று.
7. வைகை ஆறு.
8. தாயை நேசி.

குறிப்பு.—ஐ கீழ்ப்பக்கம் அளவு கடந்து செல்லுவதையும், அதன் சுழி கீழ்க்கோட்டிலிருந்து துவங்குவதையுங் கண்டு கொள்ளச் செய்க.



யானை.

ஐ = ை

ணை	லை	ளை	னை

வீணை	ஆணை	வேலை	காலை
பானை	யானை	வேளை	காளை

17. பதினேழு· கள·

1. பூனைத் தலை,
2. யானைக் காது.
3. கண்ணை மூடு.
4. வீணை வாசி.
5. வெள்ளை வேட்டி.
6. சாயச் சேலை.
7. காளைக் கன்று.
8. நல்ல பிள்ளை.

குறிப்பு:—ண், ல், ள், ன் இந்த நான்கு எழுத்துக்களோடு ஐ சேருகையில் ை அறிகுறியாக வரும், ை வராதென்பதையும், அவ்வறிகுறி அளவு கடந்து கோட்டுக்கு மேல் செல்லுமென்பதையும் உணர்த்துக.



ஒட்டகம்.

ஒ=ெ—ா ஓ=ே—ா

கொவ்வை	சொல்	தொப்பி	யோகம்
கோடு	சோறு	தோப்பு	வரோம்
நொய்	பொன்	மொட்டு	விழோம்
நோவு	போடு	மோசம்	கள்ளோ

18. பதினெட்டு. கஅ.

1. ஒரு ஒட்டகம்.
2. ஓரம் பேசேல்.
3. பாலோ தயிரோ ?
4. ஊடோ பாவோ ?
5. ங்+ஒ=ஙொ.
6. ங்+ஓ=ஙோ.
7. ஞ்+ஒ=ஞொ.
8. ஞ்+ஓ=ஞோ.

குறிப்பு:—ஒ, ஓ என்ற எழுத்துக்கள் அளவு கடந்து கீழ்ப்பக்கம் செல்லுமென்பதையும், அவைகளின் சுழிகள் கீழ்க் கோட்டிலிருந்து துவங்குமென்பதையுங் கண்டு கொள்ளச் செய்க.



ஓந்தி=ஓணன்.

ஒ ஓ

ணொ	றொ	னொ
ணோ	றோ	னோ

19. பத்தொன்பது. ௧௯.

1. விண்ணொளி பார். 5. மானோ மறையோ?
2. கன்றொடு பசு 4. சோறோ சேறோ?
3. முன்னொரு நாள். 6. கண்ணோ புண்ணோ?

குறிப்பு:—ண், ற், ன் இம்மூன்றெழுத்துக்கள் மாத்திரம் ஆ சேருகையில் மற்ற எழுத்துக்களிலிருந்து பேதப்படுகின்றனபோல் ஒ, ஓ சேரும் பொழுதும் பேதப்படுகின்றனவென்பதைத் தெளிவாய்க் காட்டுக.

வௌவால்.

171018
சென்னை-600 008

ஔ=ெ—ள.

ஙௌ	ஞௌ	டௌ	ணௌ	நௌ	னௌ
லௌ	ழௌ	ளௌ	றௌ	ரௌ	ஔ

கௌளி	சௌரியம்	மௌனம்	வௌவால்
தௌவை	பௌத்திரி	யௌவனம்	அஃறிணை

20. இருபது உம்.

1. ஔவியம் பேசேல்.
2. இந்த ஔடதம் சுகம் தரும்.
3. எஃகு ஓர் வகை இரும்பு.
4. வௌவால் இரவில் பறக்கும் பட்சி.

அப்பியாசம் 4.

ஃ	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
க்	க	கா	கி	கீ	கு	கூ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ
த்	த	தா	தி	தீ	து	தூ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ
ற்	ற	றா	றி	றீ	று	றூ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ

ஆய்தம் 1; உயிர் 12; மெய் 18; உயிர்மெய் 216.

அப்பியாசம் 4.

எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
கெ	கே	கை	கொ	கோ	கௌ
ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
டெ	டே	டை	டொ	டோ	டௌ
ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
தெ	தே	தை	தொ	தோ	தௌ
நெ	நே	நை	நொ	நோ	நௌ
பெ	பே	பை	பொ	போ	பௌ
மெ	மே	மை	மொ	மோ	மௌ
யெ	யே	யை	யொ	யோ	யௌ
ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
லெ	லே	லை	லொ	லோ	லௌ
வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
றெ	றே	றை	றொ	றோ	றௌ
னெ	னே	னை	னொ	னோ	னௌ

ஆகத் தமிழ் எழுத்துக்களின் தொகை 247.

அப்பியாசம் 5.

1. வாழைக் கன்று; தென்னம் பிள்ளை.
2. எலிக் குஞ்சு; பாம்புக் குட்டி.
3. மாட்டுக் கன்று; ஆட்டுக் குட்டி.
4. கீரிப் பிள்ளை; பூனைக் குட்டி.
5. கோழிக் குஞ்சு; கிளிப் பிள்ளை.
6. குயில் கூவும்; வானம்பாடி பாடும்.
7. சேவல் கூவும்; ஆண் மயில் ஆடும்.
8. நாய் குலைக்கும்; நரி ஊளையிடும்.
9. குதிரை கனைக்கும்; கழுதை கத்தும்.
10. சிங்கம் கர்ச்சிக்கும்; யானை பிளிறும்.

அப்பியாசம் 6.

1. அதி காலையில் எழுந்திரு.
2. சோம்பலாய் இராதே.
3. நாடோறுங் குளித்துச் சுத்தமாய் இரு.
4. உன் உடுப்புஞ் சுத்தமாய் இருக்கட்டும்.
5. ஒழுங்காய்ப் பாடசாலைக்குப் போ.
6. உன் பாடங்களை நன்றாய்ப் படி.
7. உபாத்தியாயர் சொல்லுகிறபடி செய்.
8. கெட்ட பிள்ளைகளோடு கூடாதே.
9. எப்போதுஞ் சந்தோஷமாய் இரு.
10. ஒருக்காலும் பொய் சொல்லாதே.

7 அப்பியாசம்

1. எனக்கு ஒரே ஒரு தலை உண்டு.
2. நான் என் கண்களால் பார்க்கிறேன்.
3. என் இரு காதுகளினால் கேட்கிறேன்.
4. வாசனை அறிய எனக்கு மூக்கு உண்டு.
5. பேசவும் பாடவும் வாய் உதவுகிறது.
6. வாய்க்குள் நாவும், பற்களும் இருக்கின்றன.
7. என் கைகளால் வேலை செய்கிறேன்.
8. என் இரு கால்களால் நடக்கிறேன்.
9. கைகளிலும், கால்களிலும் விரல்கள் உண்டு.
10. கழுத்து தலையை உடம்போடு சேர்க்கிறது.

அப்பியாசம் 8.

ஒரே ஒரு தேவன் உண்டு; அவரே நமது பரம பிதா; வணக்கம் அவருக்கே உரியது. அவர் பரிசுத்தர்; பாவத்தைப் பகைக்கிறார். அவர் அன்புள்ளவர்; பாவிகளை நேசிக்கிறார். அவர் நீதியுள்ளவர்; பாவத்துக்காகத் தண்டிப்பார். அவர் அரூபி; நாம் அவரைக் காணக் கூடாது. அவர் எங்கும் நிறைந்திருக்கிறார்; நமது நினைவையும் அறிவார்.

மனிதர் எல்லாரும் நமது சகோதரர்; உன்னைப் போல் உன் பிறனையும் நேசி. எல்லா மனிதரும் பாவிகள்; நீ உன் பாவத்துக்காகத் துக்கப்பட்டு, மன்றாடினால் தேவன் இரங்குவார். தான தருமங்களால் மோட்சம் போக முடியாது; தேவ அருளால் போகலாம்.

அப்பியாசம் 9.

(1) அளவுக்குள்ளிருக்கும் ஒரே உயரமான எழுத்துக்கள்.

ட ப ம ய

ர ச க ங

வ ல ள ண ன

ஃ உ ஊ எ எ

(2) அளவு கடந்து கீழ்ப் பக்கஞ் செல்லும் எழுத்துக்கள்.

ஞ த ந ழ ற

அ ஆ ஐ ஒ ஓ

(3) அளவு கடந்து கீழும் மேலுஞ் செல்லும் எழுத்து. இது துவங்குகிற இடத்தையும் முடிகிற இடத்தையுங் கவனி.

இ

(4) விலா புடைத்திருக்கும் எழுத்துக்கள்.

க ச த

(5) அ வரிசையில் தலை சுழித்து வரும் எழுத்துக்கள். சுழி எங்கே துவங்கு கிறது என்பதைக் கவனி.

ரு

ண ல வ ள ன

(7) ஆ வரிசையில் அளவு கடந்து கீழே செல்லும் எழுத் துக்கள்.

ணு ரு ளு

(7) இ அறிகுறி டி ஒன்றில் மாத்திரம் அளவு கடந்து கீழ்ச் செல்லும்; மற் றெல்லா எழுத்துக்களிலும் அளவு கடந்து மேற் செல்லும்.

டி

சி ஞி நி வி னி

(8) ஈ அறிகுறி டீ ஒன்றில் மாத்திரம் அளவுக்குள்ளிருக்கும்; மற்றெல்லா எழுத்துக்களிலும் அளவு கடந்து மேற் செல்லும்.

டீ

கீ ணீ தீ யீ ரீ

600 008.

(9) உ அறிகுறி சு ஒன்றில் மாத்திரம் உள்ளடங்கியிருக்கும்; டு ஒன்றில் மாத்திரம் அளவு கடந்து மேற் பக்கமும் கீழ்ப்பக்கமுஞ் செல்லும்; மற்றெல்லா எழுத்துக்களிலும் அளவு கடந்து கீழ்ச் செல்லும். டு முடிகிற இடத்தைக் கவனி.

சு டு

கு ஙு து மு ளு

(10) ஊ அறிகுறி கூ ஒன்றில் மாத்திரம் மற்ற எழுத்துக்களிலிருந்து பேதப்பட்டும், அளவுக்குள் அடங்கியுமிருக்கும்; டூ ஒன்றில் மாத்திரம் அளவு கடந்து மேற் பக்கமும் கீழ்ப் பக்கமுஞ் செல்லும்; மற்றெல்லா எழுத்துக்களிலும் அளவு கடந்து கீழ்ச் செல்லும்.

கூ டூ

பூ ஙூ லூ ழூ

(11) எ, ஏ அறிகுறிகளாகிய கொம்புகள் இரண்டும் அளவு கடந்து மேற் செல்லும்.

ெ ே

(12) ஐ வரிசையில் அளவு கடந்து மேற்செல்லும் எழுத்துக்கள்.

ணை லை ளை னை

(13) ண், ற், ன், இம்மூன்றெழுத்துக்கள் மாத்திரம் ஆ சேருகையில் மற்ற எழுத்துக்களிலிருந்து பேதப்படுகின்றனபோல், ஒ, ஓ சேரும் பொழுதும் பேதப்படுகின்றன.

ணொ றொ னொ

ணோ றோ னோ

(14) **ஔ** அடையாளமாகிய **ெ–ள**

உயிர்மெய் யெழுத்துக்களில் மற்ற அடையாளங்களைப்போல் பேதப்படுகிறதில்லை.

கௌ, ஙௌ, ணௌ,

ழௌ, றௌ, னௌ.

PARADISE BIRD'S PUBLICATIONS.

Series.	No.	Name of Books.	Rs.	A.	P.
FIRST	1.	Nine Weeks' Arithmetic, English ...	0	1	0
	2.	Catechetical Genesis, Tamil (Out of print).			
	3.	Catechetical Gospel, Tamil (Out of print).			
	4.	The Seasons and Tides, Tamil ...	0	1	0
	5.	Causes which determine Climate, Anglo-Tamil	0	0	9
SECOND	6.	Domestic Economy, Tamil ...	0	12	0
	7.	First Book, Tamil	0	2	6
	8.	Domestic Hygiene, Tamil ...	0	6	0
	9.	The Boy Preacher, Tamil (Out of print).			
	10.	The **Lord's** Cash book, Tamil ...	0	1	0
THIRD OR JUBILEE	11.	My Conception of a Lady, English ...	0	2	6
	12.	My Conception of a Gentleman, English	0	2	6
	13.	Paradise within the Thorn Hedge, Tamil	0	6	0
	14.	Sweet Scented Garland, Tamil ...	0	–	6
	15.	The Hero who conquered the Devil, Tamil	0	1	0
	16.	A Happy Christmas, Tamil (Out of print)			
	17.	War and Peace, English (Out of Print).			
FOURTH	18.	Domestic Medical Science, Tamil ...	0	6	0
	19.	Domestic Temperance Science, Tamil ...	0	4	0
	20.	Rai Bahadur Gnaniyar Nadar, English ...	0	8	0
	21.	Prayer, English (In abeyance) ...			
FIFTH	22.	The Missing Rib, Tamil	0	4	0
	23.	Septenary Fruits of the Cross, Tamil ...	0	4	0
	24.	History of India, Tamil (In the Press).			
	25.	Civics, Tamil (Under preparation).			
	26.	I நான் (In contemplation).			

Apply to the Author:—

Y. G. BONNELL, P.B.,

Paradise Lodge, Rayapuram,

MADRAS.